Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

ஈடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ தை மீ௳ உ 24 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 26 (06:02:1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:69

ஜோதி
தமிழ் மாத இதழ்
22, இராமையா செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம்.
படிக்க பயனுள்ள உதவிகரமான தகவல்களை வாசகர்கள், பொது மக்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிவருகிறது!
ஜோதி
தமிழ் மாத இதழ்
22, இராமையா செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம்.

# பருத்தித்துறை பயங்கரத்தில் 8 பேர் பலி!

## சந்தைக்குள் மோட்டோ குண்டு 4 பெண்கள் துடிதுடித்து மரணம்

—அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன்—

யாழ்ப்பாணம், பெப். 6

பருத்தித்துறையில் நேற்று நண்பகல் நடந்த பயங்கரத்தில் எட்டுப் பொதுமக்கள் பலியானார்கள்.

மோட்டோ குண்டுகள் மீன் சந்தைக்குள் வந்து விழுந்தபோது நான்கு பெண்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து மாண்டனர்.

பாடசாலைக்கு அருகில் விழுந்த மற்றொரு மோட்டோ குண்டு மாணவி ஒருத்தியின் கழுத்தை துளைத்தது.

மரக்கறிச் சந்தையை நோக்கித் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப் பட்டதால் அங்கு நின்ற இருவர் பலியானார்கள்.

பருத்தித்துறையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற சம்பவங்களில் 15 க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இதன் பின்னர் நேற்று மாலை பருத்தித்துறை இராணுவ முகாமை நோக்கி போராளிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். ரொக்கெட் லோஞ்சர்கள் பெரும் அளவு பயன்படுத்தப்பட்டன.

சம்பவங்கள் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்று பகல் 11-50 மணி அளவில் இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியே வந்தனர். அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி வந்தனர். முகாமில் இருந்து மோட்டோ ஷெல் குண்டுகளும் தீர்க்கப்பட்டன.

மோட்டோ ஷெல்கள் மீன் சந்தைக்குள்ளும் விழுந்து வெடித்தன. அப்பொழுது நான்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## மூதூரில் ஒன்பது இளைஞர் கைது

திருகோணமலை பெப். 6

மூதூர்த் தொகுதியில் கட்டைப்பறிச்சான் என்னும் கிராமத்தில் 9 இளைஞர்களைப் பாதுகாப்புப் படையினர் கடந்த ஞாயிறு கைது செய்தனர். அனைவரும் 15, 16 வயதுக்குட்பட்ட இளைஞர்களாவர்.

திருகோணமலைக் கடற்படை முகாமில் இவர்கள் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## 10 வயது மாணவியின் கழுத்தை குண்டு தாக்கியது

—நல்லூர் செய்தியாளர் க இரத்தினராஜசிங்கம்—

நல்லூர், பெப் 6

பருத்தித்துறையில் நேற்று நடந்த தாக்குதல் சம்பவங்களில் காயம் அடைந்தவர்களில் 10 வயது பாடசாலை மாணவி நிருபாவும் ஒருவர். இவர் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி.

இவரது கழுத்தைத் தாக்கி குண்டு வெளியேறி இருந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடையைப் பூட்டி விட்டு வந்தபோது குண்டு பாய்ந்தது

நல்லூர், பெப். 6

பருத்தித்துறைப் பக்கமாக குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டதால் நான் கடையைப் பூட்டி விட்டு வெளியில் வந்தேன். அப்பொழுது எங்கிருந்தோ வந்த குண்டு ஒன்று எனது இடுப்பைத் தாக்கியது.

நேற்று நடந்த பருத்தித்துறைச் சம்பவத்தில் காயமடைந்த சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் (வயது 47) இவ்வாறு தெரிவித்தார்.

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பருத்தித்துறை 'சிங்கர்' தையல் மெஷின் கம்பெனியில் வேலை செய்கிறார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## திண்ணையில் இருந்தேன் ஷெல் விழுந்து வெடித்தது

நல்லூர், பெப். 6

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள், குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டபோது முருகனைக் கும்பிட்டபடி திண்ணையில் அமர்ந்திருந்தேன்.

வேலாயுதம் மகா வித்தியாலயப் பக்கம் இருந்து வந்த குண்டு எனது வீட்டைத் துளைத்துக் கொண்டு வந்து வெடித்தது. இதனால் எனது கண்ணில் காயம் ஏற்பட்டது.

நேற்று பருத்தித்துறையில் உள்ள ஒரு வீட்டின் மீது "ஷெல்" விழுந்து வெடித்ததின் காரணமாக இராமலிங்கம் சரவணமுத்து (வயது 77) என்ற வயோதிபர் காயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:

நேற்றுக்காலை 12 மணி இருக்கும். வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தேன்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரி வராதது நல்லது தானாம்

### அரசின் கருத்து இது

கொழும்பு, பெப். 6

இனப் பிரச்சினைக்கான யோசனைகளில் அரசாங்கத்தின் நிலைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைக்கும் இடையே பெரிய விரிசல் இன்னும் உள்ளது.

இச்சூழ்நிலையில் திரு. ரொமேஷ் பண்டாரி வருவதில் எதுவித பிரயோசனமும் ஏற்படாதுதான், இப்படி அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிடப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரான ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் இட்ட நேரடி உத்தரவினாலேயே பண்டாரி விஜயம் ரத்தானது

சென்னை, பெப். 5

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு ரொமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயம் பிரதமர் ராஜீவ் காந்தியின் நேரடி உத்தரவின் பேரிலேயே திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

இந்த தகவலை 'இந்து' பத்திரிகை வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் பதில் எந்த விதத்திலும் திருப்தியளிப்பதாக இல்லை என்று கூட்டணித் தலைவர்கள் தமிழகத்தில் வைத்து திரு. காந்தியிடம் எடுத்துச் சொன்னார்கள்.

அதனை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் திரு. ராஜீவ்காந்தி பண்டாரியின் விஜயத்தை திடீரென ரத்துச்செய்தார்.

இதற்கிடையில் தமிழ் மொழி, காணி, குடியேற்றம் சம்பந்தமாக சில முடிவுகளை மேற்கொள்ள இருப்பதாக இலங்கை அரசின் 57 பக்கப் பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த முடிவுகள் இன்னும் இரண்டுவார காலத்தில் இந்தியாவுக்குக் கிடைத்தால் மட்டுமே திரு. பண்டாரி மீண்டும் இலங்கை செல்வதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

—இவ்வாறு இந்துசெய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# கிழக்கில் நேற்று ஹெலிகொப்டர்கள் மீது தாக்குதல்

## மட்டக்களப்பு, மூதூரில் வெவ்வேறு சம்பவங்கள்

—மட்டக்களப்புச் செய்தியாளரும், அலுவலகச் செய்தியாளரும்—

யாழ்ப்பாணம், பெப். 6

கிழக்கு மாகாணத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் நடந்த சம்பவங்களில் பாதுகாப்புப் படையினரின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூரில் நடந்த தாக்குதலில் ஹெலிக்கொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டு அது நொருங்கியதாக அறியவந்துள்ளது. விமானி உட்பட மூவர் மரணமானதாகவும் சொல்லப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், இலுப்படிச்சேனை என்ற இடத்திலும் ஹெலிக்கொப்டர் ஒன்று சுட்டு சேதப்படுத்தப் பட்டதாக அறியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் விமானி உட்பட இரண்டு பேர் காயம் அடைந்தனராம்.

கடந்த சில தினங்களாக போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையே மூதூரில் சமர் இடம்பெற்று வருகின்றது.

நேற்றுப் போராளிகள் ஹெலிக்கொப்டர் ஒன்

(4-ம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்கு வந்த பொருள்கள் ரயிலுடன் கடத்தப்பட்டு அபகரிப்பு!

## சுன்னாகம், சூராவத்தை பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து குண்டுமாரி

—சுன்னாகம், காங்கேசன் செய்தியாளர்கள்—

சுன்னாகம், பெப். 6

கொழும்பில் இருந்து இராணுவத்துக்காக சரக்கு ரயிலில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் மல்லாகத்தில் வைத்து இளைஞர்களால் அபகரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து மல்லாகம், சூராவத்தை பகுதிகளில் நேற்று நண்பகல் ஹெலிக்கொப்டர் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பில் இருந்து ரயில் மார்க்கமாக இராணுவத்துக்கு உணவுப்பொருள்கள், ரயர், ரியூப் வகைகள், மற்றும் எரிபொருள் ஆகியவை நேற்று வட பகுதிவந்து சேர்ந்தன.

இந்த ரயில் நேற்றுக்காலை காங்கேசன் துறை ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

பொருள்களை இறக்கிக்கொண்டு போவதற்காக பலாலி இராணுவ முகாமிலிருந்து ஆயுதப் படையினர் காங்கேசன் துறை நோக்கி நடைபவனியாக வந்துகொண்டிருந்தனர்.

ஆயுதப்படையினருடன் கனரக வாகனங்களும் பொருள்களை எடுத்துச் செல்ல தனியார் லொறிகளும் பவுசர்களும் வந்துகொண்டிருந்தன.

இவர்கள் வந்துகொண்டிருந்தபோது சிறிய விமானம் ஒன்றும் ஹெலிக்கொப்டரும் தாழப் பறந்து பாதுகாப்பு அளித்துக் கொண்டுவந்தன.

இந்த நடைபவனி காங்கேசன் துறை ரயில் நிலையத்தை அடையமுன்னர் இளைஞர் கோஷ்டி ஒன்று இந்த ரயிலைக் கைப்பற்றியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.கா. அலுவலகம் சேதமாக்கப்பட்டது

## ஹட்டனில் மீண்டும் கொந்தளிப்பு

கொழும்பு, பெப். 6

அமைச்சர் தொண்டமானின் விஜயத்தின் பின்னரும் ஹட்டனில் மீண்டும் வன்செயல்கள் இடம் பெற்றன.

தமிழ் சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான வீடு செவ்வாய்க்கிழமை இரவு எரிக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஹட்டன் அலுவலகமும் சேதமாக்கப்பட்டது.

தமிழ் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து ஹட்டனில் பதற்றம் நிலவியது.

செவ்வாய் பகல் தான் அமைச்சர் தொண்டமான் தனது சகாக்களுடன் ஹட்டனுக்கு விஜயம் செய்து, தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகளைச் சந்தித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு அன்று மாலையே அமைச்சர் தொண்டமான் கொழும்பு திரும்பிவிட்டார்.

அதன் பின்னர் தான் ஹட்டனில் வன்செயல்கள் மீண்டும் தொடங்கின.

ஹட்டன் ஹைலண்ட் கல்லூரி விடுதிகள் பலவும் எரிக்கப்பட்டன.

ஹட்டன் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் நேற்று போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது. மரங்களும், பெருங்கற்களும் போட்டு வீதிகள் தடை செய்யப்பட்டிருந்தன.

அதனால் அந்தப் பகுதிக்கு மேலதிகமாக அனுப்பப்பட்ட இராணுவத்தினர் அங்கு செல்ல முடியாது இருந்தது.

தோட்டப்பகுதிகளுக்கு உணவு விநியோகம் தடைப்பட்டது. உணவுப் பொருள் கொண்டு வரச் சென்றவர்கள் குண்டர்

(4-ம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



தமிழ் ஆக்களை உப்பிடிப் பயப்படுத்திக் காசு பறிக்கிறத்துக்கு அரசாங்கமே உடந்தையாயிருக்குப் பாத்தியளே!

## இளைஞரின் சடலம்

மட்டக்களப்பு, பெப். 6

கல்முனை ஆஸ்பத்திரிக்கு முன்னால் நேற்றுக் காலை 22 வயது தமிழ் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரின் மரணத்தில் மர்மம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

'சதா' என்று இறந்தவர் அழைக்கப்பட்டு வந்தாராம்.

## அக்கரைப்பற்றில் தேடுதல்

கொழும்பு, பெப். 6

அக்கரைப்பற்றில் நேற்றுக் காலை ஆயுதப்படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

முடிவில் 100க்கு மேற்பட்டோர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

### சுபநேரம்

6.2.1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
8.05 முதல் 9.35 வரை

ராகுகாலம்:
2.05 முதல் 3.35 வரை

இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

* தமிழகத்தில்

## பாப்பரசருக்கு பெரு வரவேற்பு

சென்னை, பெப். 5

நேற்று சென்னைக்கு விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசரை சுமார் ஐந்து லட்சம் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு குதூகலமாக வரவேற்றார்கள்.

வட இந்திய பகுதிகளிலும் பார்க்க மிகப் பிரமாண்டமான வரவேற்பு தமிழகத்தில் புனித பாப்பரசருக்கு வழங்கப்பட்டது.

சென்னைக் கடற்கரையில் பாப்பரசர் நேற்று நடத்திய திறந்தவெளி வழிபாட்டில் லட்சோப லட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

பாப்பரசர் நேற்று மாலை கோவாவுக்குப் புறப்பட்டார்.

## யாழ் -- கொழும்பு ரயில் பயணிகளின் கசப்பான அனுபவம்

யாழ்ப்பாணம், பெப். 6

உரிய கட்டணம் செலுத்தியும் தண்டப் பணம் செலுத்தவேண்டிய நிலைக்கு ஆளானார்கள், இரண்டு யாழ் ரயில் பயணிகள்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை (4-2-86) இடம்பெற்றது.

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் உரும்பராய் கிழக்குவாசி. மற்றவர் மானிப்பாய்வாசி.

கசப்பான அனுபவம்பற்றி உரும்பராய் கிழக்குவாசி சொன்னதாவது!

"யாழ்சென்று திரும்ப 4-2-86இல் மருதானை ரயில் நிலையத்தில் 120 ருபா செலுத்தி இருவழிப் பாதை டிக்கெட் பெற்றுக்கொண்டேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடிட்டிங் பற்றி ரசிகருக்கு புரிவதில்லை

### புரியவைக்கிறார் எடிட்டர்

ஒரு படம் வெற்றிகரமாக உருவாக முக்கிய பங்கு வகிப்பவர் டைரக்டர். அதற்கு அடுத்த இடத்தை வகிப்பவர் எடிட்டர்.

சாதாரண ஒரு சினிமா ரசிகனுக்கு எடிட்டிங் துறையைப் பற்றி அவ்வளவாகத் தெரிவதில்லை.

இதைப்பற்றி எடிட்டர் ஆர். பாஸ்கர் விவரிக்கிறார்:

இந்தத் துறையைப் பற்றிய அடிப்படை விஷயங்களை யாவது தெரிந்து வைத்திருப்பவரால் மட்டுமே எடிட்டிங்கின் பங்கை முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியும்.

ஒரு படத்தின் ஷூட்டிங்கிற்கு எத்தனை நாள் தேவைப்படுகிறதோ, அத்தனை நாள் எடிட் செய்வதற்கும் தேவை.

ஒவ்வொரு காட்சியாக எடிட் செய்து படம் முழுமையானதும் டைரக்டருடன் அமர்ந்து மூவியாலாவில் படத்தைப் பார்த்து, மீண்டும் சில திருத்தங்களைச் செய்கிறோம்.

சுருக்கமாகச் சொன்னால், ஏறக்குறைய படத்தின் கதையே எடிட்டிங் ரூமில்தான் உருவாகிறது. படம் தொடங்கிய நாளிலிருந்து ரிலீஸாகும்வரை எடிட்டருக்கு வேலை இருந்துகொண்டே இருக்கும்.

நான் ஆரம்பத்தில் இந்திப் படங்களை எடிட் செய்துவந்தேன். தமிழில் எடிட் செய்த முதல் படம் 'கொஞ்சும் சலங்கை' மொத்தம் எழுபத்தைந்து படங்களுக்கு மேல் இதுவரை எடிட் செய்துள்ளேன்.

சண்டைக் காட்சி, நடனம், க்ளைமாக்ஸ் இப்படி ஒவ்வொரு காட்சியாக மட்டுமன்றி, படம் முழுவதையும் கொஞ்சம்கூட விறுவிறுப்புக் குறையாத வகையில் எடிட்டிங் அமைய வேண்டும்.

அதே சமயம் கதையின் ஓட்டம் பாதிக்காத வகையிலும், படம் தொய்வில்லாமல் ஸ்முத்தாகக் கொண்டு செல்வதும் எடிட்டிங்கின் முக்கிய பணியாகும்.

பொறுமையும் பொறுப்பும்தான் இந்தத் தொழிலின் முக்கியத் தேவை.

இப்படி சிறிதும் கர்வம் இல்லாமல் கூறுகிறார் பல வெள்ளி விழாப் படங்களுக்கு எடிட்டராகப் பணிபுரிந்திருக்கும் எடிட்டர் பாஸ்கர்.

தினசரி சினிமா

## குண்டு வெடித்தது

பாரிஸ், பெப். 5

பாரிஸ் நகரில் வர்த்தக கேந்திர நிலையம் அமைந்துள்ள இடத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததால் 7 பேர் காயம் அடைந்தனர். 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவத்துக்கு எவரும் பொறுப்பு ஏற்கவில்லை.

சிவிலியன் பயணம் செய்த

# லிபிய விமானத்தை இஸ்ரவேல் இறக்கியது

## படுமோசமான வான் கொள்ளை என சிரியா கண்டனம்

திரிபோலி, பெப்.5

லிபியாவுக்குச் சொந்தமான சிவில் போக்குவரத்து விமானம் ஒன்றை இஸ்ரவேல் பலவந்தமாக தனது நாட்டுக்குள் தரையிறக்கியது.

இஸ்ரவேலின்இந்த நடவடிக்கையை சிரியா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது மிகப்படுமோசமான 'வான் கொள்ளை' என சிரியா தனது கண்டனத்தில் இஸ்ரவேலைச் சாடியுள்ளது.

லிபிய விமானத்தில் பலஸ்தீன கெரில்லாக்கள் இருப்பதாகதான் சந்தேகம் கொண்டதே விமானம் தரையிறக்கப்பட்டதற்கான காரணம் என இஸ்ரவேல் அறிவித்துள்ளது.

பலத்த சோதனைகளின் பின் விமானம் தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது. இஸ்ரவேலின் இந்த சுட்டாதுட்டித்தனம் சிவில் விமானப்போக்குவரத்துக்கு பெரியதொரு சவாலாகும்.

இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என லிபியா கேட்டுக்கொண்டுள்ளது.

இதுஇவ்வாறிக்க அமெரிக்க அச்சுறுத்தல் தொடர்பாக லிபியாவின் முறைப்பாட்டைப் பரீசிலிக்க ஐக்கிய நாடுகள் ஒருங்கிணைப்புக் கழகம் கூட்டமொன்றை இன்று நடத்தும்.

அணிசேரா நாடுகளின் தலைமைநாடானபாரதம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இந்தமாநாடு நடைபெறுகிறது. தூதரக நிலையில் இந்தப் பேச்சுக்கள்நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லிபிய விமானத்தைத் தரையிறக்கிய இஸ்ரவேலின் நடத்தையை ஆராய பாதுகாப்புசபையைக் கூட்டுமாறு சிரியா கேட்டுக் கொண்டுள்ளது.

## ஆப்கானில் விழிப்புணர்ச்சி

### நிர்வாகத்தில் ரஷ்யர்களுக்கு இடமில்லை

கொச்சின்,பெப் 5

ஆப்கானிஸ்தானில் மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அரசு நிர்வாகத்தில் ரஷ்யர்களுக்கு இடமில்லை.

முன்னாள் உயர்நீதிமன்றநீதிபதி திரு.வி ஆர் கிருஷ்ண ஐயர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆப்கான் சென்று வந்த பின்னர் இந்திய வழக்கறிஞர் சங்கத் தலைவரான திரு கிருஷ்ண ஐயர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஆப்கான் வழக்கறிஞர் சங்கத்தின் அழைப்பை ஏற்று திரு. ஐயர் அங்கு சென்றார்.

ஆப்கான் ஜனாதிபதி பாபராக்கர்மலையும் திரு. ஐயர் சந்தித்து உரையாடினார்.

ரஷ்ய துருப்புக்கள் மட்டும்தான் ஆப்கானில் உள்ளன. அவர்களின் தலையீடு அரசு நிர்வாகத்தில் அறவே இல்லை.

ரஷ்யத் துருப்புக்கள் இருப்பது எமது அழைப்பின் பேரில் என்று ஜனாதிபதி கர்மல் சொன்னார்.

ரஷ்யா, ஆப்கானை ஆக்கிரமித்துள்ளது என்று கூறுவதில் உண்மை எதுவும் இல்லை.

இப்படி திரு. கிருஷ்ண ஐயர் சொன்னார்.

வெளி உலகில்

## கிஸிஞ்ஞர் போட்டி

நியூயோர்க், பெப் 5

அமெரிக்காவின் முன்னாள் ராஜாங்க அமைச்சரும் ராஜதந்திரியுமான ஹென்றி கிஸிஞ்ஞர், நியூயோர்க் கவர்னர் பதவிக்குப் போட்டியிடப் போகிறார்.

இத்தகவலை திரு. கிஸிஞ்ஞரே சொன்னார்.

குடியரசுக் கட்சியின் சார்பில் இவர் போட்டியிடுவார்.

நியூயோர்க் கவர்னர் பதவி இப்பொழுது ஜனநாயகக் கட்சியிடம் உள்ளது.

குடியரசுத் தலைவர்களின் வேண்டுகோளின் மீதுதான் போட்டியிடப் போவதாக திரு. கிஸிஞ்ஞர் சொன்னார்.

சீக்கியர் விவகாரம்:

## பிரிட்டனின் கூற்றுக்கு பகத் கண்டனம்

புதுடில்லி, பெப். 5

சீக்கியரை வெளியேற்றுமாறு பாரதம் கோரவில்லை என பிரிட்டன் தெரிவித்துள்ளதை இந்திய வெளியுறவு அமைச்சர் பி. ஆர். பகத் கண்டித்துள்ளார்.

பிரிட்டனிடம் இந்தக் கோரிக்கையை விடுத்ததற்கான ஆதாரம் உண்டெனவும் பிரிட்டன் இதற்கு அளித்துள்ள பதில் பத்திரமாக இருப்பதாகவும் பகத் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் வாழும் சீக்கியர்கள் அங்குள்ள பாரதப் பிரஜைகள் மத்தியில் இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சித்து வருகிறார்கள்.

இந்த விடயத்தில் பிரிட்டன் பொறுப்பற்ற போக்கைக் கடைப்பிடித்தால் பாரத - பிரிட்டன் நல்லுறவு சீர் குலையக் கூடிய சூழ்நிலை தோன்றி விடலாம் எனவும் பகத் மேலும் எச்சரித்துள்ளார்.

## வெளிநாட்டவரை மணக்க ஓமானில் தடை

### சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது

பாஹ்றேய்ன், பெப். 5

ஓமான் பிரஜைகள் வெளிநாட்டவர்களை மணப்பதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

தடைகளை மீறுவோர் தமது பிரஜா உரிமையை இழக்கும் ஆபத்தை எதிர் நோக்க வேண்டிவரும் எனவும் மேலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த தடைச் சட்டம் சென்ற 2 ஆம் திகதி ஓமானில் அமுலுக்கு வந்தது.

இந்த சட்டத்தில் திருமணமாகாத வயோதிபர்களுக்கும், அங்கவீனர்களுக்கும் மற்றும் வளைகுடா கூட்டுக் கவுன்சில் நாடுகளின் பிரஜைகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்குறிப்பிடப்படுபவர்களின் திருமண விடயத்திலும் விசேட அனுமதி பெறப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமானின் வளைகுடா கூட்டுக் கவுன்சில் நட்பு நாடுகள் பாஹ்றெய்ன், குவைத், கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவையாகும்.

வெளிநாட்டவர்களை ஏற்கனவே மணந்துள்ள ஓமானியர்கள் நாட்டுக்குத் திரும்ப விரும்பும் பட்சத்தில் ஏப்ரல் மாதத்துக்குள் தமதுகுடும்பத்துக்கான விஸா அனுமதி பெற வேண்டும்.

### அவரின் பேச்சு

தென் ஆபிரிக்காவில் ஆளும் வெள்ளை இனத்தவரின் பிள்ளைகளுடன் கறுப்பு இன மாணவர்கள் கலந்து கற்பது என்ற பேசக்கே இடமில்லை.

இவ்வாறு தென்னாபிரிக்க அரசின் கல்வி அமைச்சர் கிளார்க் பத்திரிகையாளர் கூட்டமொன்றில் தெரிவித்தார்.



மக்கள் முகம்

### செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையம்

நல்லூர், பெப். 6

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையம் அண்மையில் அதன் நான்காவது ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு க. கோபாலகிருஷ்ணர் (நவீல்ட் பாடசாலை உப-அதிபர்) தலைவர் திரு. க. சண்முகநாதன், உப-தலைவர் திரு. சி. துரைராஜா செயலாளர் திரு. க. நடராசா, பொருளாளர்திரு சு. சுதாகரன், உப-பொருளாளர் திரு. வி. நந்தகுமார்.

மூவர் கொண்ட உறுப்பினர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### ஏழாம் ஆண்டு ஆரம்பிக்க அனுமதி

வட்டுக்கோட்டை பெப். 6

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இவ்வாண்டு (1986) ஏழாம் ஆண்டு (6ம் வகுப்பு) ஆரம்பிப்பதற்கு யாழ். கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். கல்விப் பணிப்பாளர்திரு. எம். சிமியாம்பிள்ளை, கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி ஆகியோர் ஒப்பமிட்டு 16. 1. 86இல் அனுப்பிய அனுமதிக் கடிதம் 24. 1. 86 இல் மேற்படி வித்தியாலயத்திற்குக் கிடைத்துள்ளது.

மினி சினிமா


### நவா மினி

(உஷா மினி முன்பாக)

* புதிய வெளியீடு

**TheDirtyDozen**

NEXT MISSION

வயது வந்தவர்களுக்கு மட்டும் முழுக்க, முழுக்க தாக்குதல் நிறைந்த மிகச் சிறந்த படம், முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.


மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# குடியுரிமைச் சட்டம் நீதியாக, விரைவாக அமுலாக வேண்டும்

## ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம் அறிக்கை

கொழும்பு, பெப். 6

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் சட்டம் நீதியாகவும் விரைவாகவும் அமுல் நடத்தப்படவேண்டும்.

இலங்கையில் உள்ள ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் விடுத்த அறிக்கையிலே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்கள் எப்போதும் வன்செயலுக்கு ஆளாகியே வந்துள்ளார்கள். அவர்கள் அமைதியாக, பாதுகாப்பாக வருங்காலத்தில் வாழ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தருணத்திலாவது நாடற்றவர்களாகக் கருதப்பட்ட மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு சட்டம் கொண்டு வந்ததை இயக்கம் பாராட்டுகிறது.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### புகார் தந்திகள் தபாலகம் ஏற்கிறது

மட்டக்களப்பு, பெப். 6

மட்டக்களப்பு தபால் நிலையத்தில் ஆயுதப் படையினருக்கெதிராக தெரிவிக்கப்படும் புகார் தந்திகள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மேற்படி தந்திகள் ஏற்றுக் கொள்ளப்படாமை குறித்து பொது மக்களும், பொது ஸ்தாபனங்களும் பிரஜைகள் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தன.

குழுவினர் தபால் அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்தே இந்த தந்திகள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

## நஷ்டஈடு கோரி ஜனாதிபதிக்கு தந்தி

சுன்னாகம், பெப். 6

பீரங்கித்தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாக்கவே ஒரு மைல் சுற்றுடல் பாதுகாப்பு வலயம் ஆக்கப்பட்டது என்று கூறப்பட்டது. ஆனால் முகாமில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ள சுன்னாகம் மயிலணியில் பீரங்கித் தாக்குதலால் மூவர்பலியாகிஉள்ளனர். இராணுவம் தமிழ் குடிமக்களை கொன்று குவிப்பதற்கே இங்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற எமது குரல் மீண்டும் உண்மையாக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம்தெல்லிப்பளை சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு வேண்டும்.

சுன்னாகம் பிரஜைகள் குழு அவசர தந்திமூலம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

### நூலகத்துக்கு சுற்று மதில்

கொடிகாமம், பெப். 6

யாழ் அபிவிருத்திச்சபை கச்சாய் உப அலுவலகத்தின் பரிபாலனத்திலுள்ள கொடிகாமம் பொது நூலகத்துக்கு 9,900 ரூபா செலவில் சுற்றுமதில் அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### சங்கிலியன் புனர்வாழ்வு உற்பத்தி நிலையம்

நல்லூர், பெப். 6

சங்கிலியன் புனர் வாழ்வுக் கழகம் புதிய உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

இடம் பெயர்ந்தோரினால் மிக்ஷர் அப்பளம், நெல்லிரசம், பற்பொடி, சவர்க்காரம் போன்ற பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.

இவர்களின் தொழிற்சாலைக்கானகட்டடத்தை [illegible] நிறுவனத்தினர் வழங்கியிருக்கின்றனர்.

### தையல்காரருக்கு ஏற்பட்ட திடீர் அனுபவம்

மட்டக்களப்பு, பெப்.6

அவசர தையல் வேலைக்காக நகரிலுள்ள தையல்காரர் ஒருவரை அவரது உபகரணங்கள் சகிதம் ஆயுதப்படையினர் தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு நகரில் நடந்தது.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

சம்பவதினம் காலை 10 மணி அளவில் தையல்காரர் தனது மகனுடன் தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

எதிர்பாராத வகையில் அங்கு வந்த ஆயுதப்படையினர் மெஷின், கத்தரிக்கோல் போன்ற உபகரணங்கள், உதவியாளர் (மகன்) சகிதம் தையல்காரரை தையல் வேலைக்கு அழைத்துச் சென்றனர்.

இராணுவ முகாமில் தையல்காரரிடம் கதவு, யன்னல் திரைச் சீலைகள் தைக்கும் வேலை ஒப்படைக்கப்பட்டதாம்.

மாலை 5 மணிக்கு வேலை முடிந்த பின்பு ஊதியத்துடன் தையல்காரர் அனுப்பி வைக்கப்பட்டார். பொழுதாகிவிட்டதால் தையல் மெஷினை மறுநாள் கொண்டு வந்து தருவதாக ஆயுதப்படையினர் தெரிவித்தனராம்.

மறுநாள் பகல் 11 மணியளவில் மெஷின் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

## மேலும் ஆதரவு இல்லங்கள் நம்மத்தியில் அமைய வேண்டும்

### துர்க்கா மகளிர் இல்ல திறப்பு விழாவில் அரச அதிபர்

காங்கேசன்துறை, பெப். 6

எமது மக்கள் இன்றுள்ள சூழ் நிலையில் அகதிகள் ஆகும் அனாதைகள் ஆகும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கு ஆதரவளித்து புகலிடம் வழங்க ஆதரவு இல்லங்கள் அவசியமானவை. இது போன்று மேலும் பல ஆதரவு இல்லங்கள் நம்மத்தியில் உருவாக வேண்டும்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய வளவில் அமைக்கப்பட்டுள்ள துர்க்கா மகளிர் இல்லத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

துர்க்கா தேவி ஆலயத்தில் இடம் பெற்ற விசேஷ பூஜையை அடுத்து மூர்த்திகளின் திருவுருவப் படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மேற்படி மகளிர் இல்லத் திறப்பு விழா இடம் பெற்றது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, ஞாபகார்த்த கல்லை திரை நீக்கம் செய்து வைத்தார்.

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது:-

வழிபாடு செய்து பிரசாதம் வாங்கிச்செல்லும் இடங்களாக மட்டும் கோயில்கள் விளங்குவது கூடாது.

அவை குடிமக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் பணி புரிய வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் இவ்வாறு பல்வேறு மக்கள் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

அதே வழியில் துர்க்கா தேவி கோயிலும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் ஒன்று தான் இந்த இல்லம் ஆகும்.

சமய சீலத்துடன் கூடிய சிறந்த பிரஜைகளை உருவாக்க இந்த இல்லம் வழி சமைக்குமென நம்புகிறோம்.

இப்படி அவர் கூறினார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன்,நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரும் பேசினர்.

திறப்பு விழாவையொட்டிய மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

### அடிக்கல் நடும் விழா

வட்டுக்கோட்டை, பெப்.6

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோ ஆதி வைரவப் பெருமான் கோயில் அடிக்கல் நடும் விழா கோயில் அபிவிருத்திச் சபைத் தலைவர்சிவநெறிக் காவலர் திரு. வீர.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி திரு. சி. செல்வராசா முதலாவது சங்கை வைத்து அடிக்கல்லை நட்டார்.

ஏனைய சங்குகளை திருவாளர்கள் வீர. தெய்வேந்திரம் ஜே. பி. வே. தம்பையா அதிபர், க. செல்வவிநாயகமூர்த்தி, சு. ஞானானந்தராசா, அ. கந்தசாமி, பொன். தெண்டாயுதபாணி, அ. இராஜகோபால், வீர சோமசுந்தரம் ஆகியோர் முறையே நட்டு நிதி உதவியும் வழங்கினர்.

கிளிநொச்சி தாக்குதல்கள்;

## காயம் அடைந்த மற்றும் இருவர்

### அனுபவத்தைக் கூறுகிறார்கள்

நல்லூர், பெப் .6

கிளிநொச்சியில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் சம்பவங்களில் காயமடைந்த மேலும் இருவர் யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

சின்னையா சுப்பிரமணியம் (25 வயது)

இவர் தர்மபுரம் பகுதியைச் சேர்ந்தவர். இவருக்கு நெஞ்சிலும் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

இவர் தர்மபுரத்தில் உள்ள தனது தேனீர் கடையினுள் நின்ற போது ஹெலிக்கொப்டர் மூலம் போடப்பட்ட குண்டு ஒன்று வெடித்துச் சிதறியதால் காயம் ஏற்பட்டது.

இராசையா செல்லத்துரை (35 வயது)

இவர் இரணைமடு பகுதியைச் சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை. கூலிவேலை செய்து வருபவர்.

இவருக்கு காலிலும் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

நடந்த சம்பவம் பற்றி இவர் சொன்னதாவது:

கூலிவேலைக்கு போய்விட்டு ரயில் தண்டவாளத்தால் நடந்து வந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது எனக்கு சிறிது தூரம் தள்ளி ஆயுதப்படையினர் வருவதைக்கண்டு ஓடினேன்.

அவர்களும் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வந்து வெடி வைத்தனர்.

எனது காலில் சூடு பட்டது. சூட்டையும் வாங்கிக் கொண்டு ஓடிய பொழுது கல் ஒன்றில் தடக்கி ரயில் பாதையில் விழுந்து விட்டேன்.

பொதுமக்கள் வந்து என்னை தூக்கிவிட்டனர். நான் பின்பு யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப் பட்டேன்.

இப்படி அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்— இந்த நான்கே பூமியில் எவர்க்கும் கடமை எனப்படும்.
— மகாகவி பாரதியார்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24805 22073
06-02-86 த. பெ. 23

# இராமந்தோறும் வைத்திய நிலையங்கள்

கிராமம்தோறும் வைத்திய நிலையங்கள் நிறுவப்பட வேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டையில், தனியார் வைத்திய நிலையத் திறப்பு விழாவில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முன்னர் எப்போதும் இல்லாத விதத்தில் இப்போது அதிக வைத்திய நிலையங்கள் அவசியம்.

சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்களில் 90 சத வீதத்தினர் இயற்கையாக உண்டாகும் வியாதிகளுக்கே சிகிச்சை பெறவேண்டி இருந்தது. இன்று நிலைமை வேறு. எதிர்பாராத விதமாகத் திடீரெனக் குண்டு பட்டு அதற்குச் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை தான் இப்போது 90 வீதமாக மாறி இருக்கிறது.

திடீரெனக் காயப்பட்டு உயிராபத்துக்கு ஆளாவோரை பிரதான பெரியாஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்ல முடியாத கஷ்டம் அடிக்கடி உருவாகிறது. பாதுகாப்பு வலயம் வந்த பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதே உயிர் போகும் சங்கதியாகி விட்டது.

ஆயுதப்படைகளின் அட்டூழியங்களைப் பார்த்தால் தமிழ் மக்களில் பலர் இறந்தொழிந்து போவது ஒரு புறமிருக்க, அவசர சிகிச்சை வேண்டி நிற்போர் எண்ணிக்கையும் மேலும் பல மடங்கு உயரலாம் எனக் கருத இடமுண்டு.

கிராமங்களில் வைத்தே மக்கள் சுடப்படும் போது, வீட்டுக்குள் இருப்பவர்களே இழுத்துச் சுடப்படும் போது சூட்டு காயங்களுக்கு ஒரே நேரத்தில் சிகிச்சை பெற வேண்டியவர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்காக இருக்கும்.

அவர்கள் எல்லோருக்கும் தமிழ் மாவட்டங்களில் உள்ள பிரதம ஆஸ்பத்திரிகளில் மட்டும் வைத்துச் சிகிச்சை தருவது கஷ்டம். ஆகையால் இன்றைய சூழ்நிலையில் தமிழ்ப் பகுதிகளில் அவசர சிகிச்சை வழங்கக்கூடிய சிறிய அளவிலான வைத்திய நிலையங்கள் நிறுவப்படுவது மிகவும் அவசியமான காரியமாகும். கிராம மட்டத்தில் மட்டும் அன்றி, குறிச்சிக்குக் குறிச்சி அவை நிறுவப்படுவது பெரிதும் பயன்தரும்.

தமிழ் மக்களை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் அரசாங்கம் கிராம மட்ட வைத்திய சேவையை எங்களுக்குச் செய்து தருமா?

ஆகவே, நாமே அவற்றை ஸ்தாபிக்க வேண்டும்; கொண்டு இயக்கவும் வேண்டும். சேவை மனப்பான்மையுள்ள இளைஞர்களின் ஊக்கத்தாலும், ஆதரவாலும் யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன.

அவை பரந்தஅளவில் நிறுவப்படவேண்டும். பிரஜைகள் குழுக்கள், சனசமூக நிலையங்கள் போன்ற சமூகநல ஸ்தாபனங்களும் சம பங்காற்றி உதவ வேண்டும்.

அந்தந்தக் கிராமங்களில் உள்ள தகுதி பெற்ற வைத்தியர்களும், வைத்தியத்துறை சம்பந்தப்பட்ட ஏனையோரும் கிராமவைத்திய நிலையங்களுக்குத் தமது சேவையை மனம் விரும்பிச் செய்யவேண்டும்.

முதலுதவி, ஆரம்ப சுகாதாரம், அவசர சிகிச்சை ஆகியவற்றில் இளைஞர்கள், யுவதிகளுக்கு பயிற்சி அளித்தால் மேலும் பெரும் சேவையாக அமையும்.

கிராம மட்டத்தில் நிறுவப்படும் வைத்திய நிலையங்களுக்கு மருந்து மற்றும் உபகரண வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டால் அவர்களும் உதவக் கூடும்.

இதற்கிடையில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கிராமப்பகுதிகளில் தாமே சொந்தத்தில் வைத்திய நிலையங்களை நிறுவிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று தனியார் வைத்தியர்கள் நினைக்கக் கூடாது.

அவ்வாறு வைத்திய நிலையங்களை நிறுவினாலும் அவசர நேரங்களில் உயிராபத்து உள்ள நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை செய்வதற்குப் பின்நிற்கலாகாது.

## யாழ் விவசாயிகளுக்கு 2, 3, 5, 10 கிலோ பைக்கெட்டுகளில் பசளை

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான பசளை வகைகள் இரண்டு, மூன்று, ஐந்து, பத்து கிலோ பைக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இது உதவியாக இருக்கும்.

சிறிய அடிப்படையில் விவசாயம் செய்பவர்களுக்கும் இது வசதியாக இருக்கும்.

இவ்வாறு யாழ் கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் விளக்கினார்.

இப்பசளை பைக்கெட்டுகள் தேவைப்படுவோர் இவற்றைத் தத்தம் பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாகப் பெறமுடியும் என்றும் திரு. க. பரமலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி இ. தொ. கா பிரதிநிதி தொண்டாவிடம் கோரிக்கை

# இந்திய வம்சாவழியினர் தினமும் பலியாகின்றனர்

## அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

உருத்திரபுரம், பெப் 6

வட பகுதியில் வாழும் இந்திய வம்சாவழியினர் இராணுவத்தின் அட்டகாசங்களுக்குத் தினமும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இம்மக்கள் முற்றாக அழிக்கப்படுவர்.

ஆதலால் இது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் தொடர்பு கொண்டு இந்திய வம்சாவழி மக்களையும் ஏனைய தமிழ் மக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பாளர் திரு. எஸ். கோபால் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. கோபால் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

25. 1. 86 சனிக்கிழமை நண்பகல் 1-30 மணியளவில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நின்ற பல இந்திய வம்சாவழியினர் கொல்லப்பட்டனர். வேறு பலர் படுகாயமுற்று அபாயகரமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நாங்கள் அப்பாவிகள்; எங்களைச் சுடாதீர்கள் என்று அங்கு நின்ற ஆயுதப்படையினரைப் பார்த்து சிங்களத்தில் கூறி மன்றாடிய ஒரு இந்திய வம்சாவழி பிரஜை அதே இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது குடும்பத்தினரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டனர்.

பெண்கள், பிள்ளைகள், வயோதிபர்கள் ஆகியோரும் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். அப்பாவி இந்திய வம்சாவழியினர் தங்களைச் சுடவேண்டாம் எனக் கையெடுத்துக் கும்பிட்டபோதும் கூட, நாயைச் சுடுவதுபோலச் சுட்டுக் கொன்றனர்.

இதுதவிர கிளிநொச்சியில் மலையக மக்கள் வாழும் கிராமங்களுக்குத் தினமும் செல்லும் ஆயுதப்படையினர் அங்குள்ள அப்பாவி மலையக மக்களை கைதுசெய்து துன்புறுத்தி வருகின்றனர்.

பலகடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்படுகின்றன. பொருள்கள், நகைகள், பணம் கொள்ளையடிக்கப்படுகின்றன, பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகின்றனர்.

மலையக மக்கள் வாழும் வவுனியா, செட்டிக்குளம் பாவற்குளம், கனகராயன் குளம் ஆகிய இடங்களிலும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு இந்தநிலை ஏற்பட்டு அவர்கள் சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள்.

இவர்களின் விடயத்தில் எமது தலைவர் அமைச்சர் தொண்டமான் உடனடியாக நடவடிக்கை எடுத்து இவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கோரப்படுகிறது.

### பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், பெப். 6

நவாலி வை. எம் சி ஏ. நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புப் போட்டியில் பின்வருவோர் பரிசுகள் பெற்றுள்ளனர்:-

1ஆம் பரிசு என். நித்தியானந்தன், 2ஆம் பரிசு – கே. சதீஸ்குமார், 3ஆம் பரிசு – குமுதினி ஜீவரத்தினம்.

ஆறுதல் பரிசுகள்

1. நிருபன் நித்தியானந்தன் 2. கே. சுந்தரராஜன் 3. எஸ். மகேந்திரன் 4. ஜே. குமாரானந்தன் 5. எஸ். ஜெனுலினி.



### பொய்யாமொழி

குறள்:

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

பொருள்:

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

## யாழ் மாவட்ட விவசாய பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ் மாவட்ட விவசாயிகள், விவசாய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விவசாயம் சம்பந்தமான பல்வேறு அம்சங்களில் போதனையும் பயிற்சியும் வழங்க யாழ் கமநலசேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்பில் 300 பிரதிநிதிகள் பங்கு கொள்வார்கள்.

இம்மாத இறுதியில் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

## மட்டக்களப்பு - கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறியோர்

அச்சுவேலி பெப்.6

கோப்பாய் — மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்றுவெளியேறி யாழ் மாவட்ட பாடசாலைகளில் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர் விவரம்

### மட்டக்களப்புஅரசினர் ஆசிரியர்கலாசாலையில் பயிற்சி பெற்றோர்

திரு. ஏ.அழகரத்தினம் (கணிதம்) வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாசாலை. செல்வி வை கனகலிங்கம் (கணிதம்) எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் திரு. ஏ. மகேந்திரன் (கணிதம்) நெடுந்தீவு மகாவித்தியாலம். செல்வி ரீ. நந்தினி (கணிதம்) நாரந்தனை. றோ.க.வித்தியாலயம்; திருமதி. எஸ். செல்வேந்திரா (கணிதம்) புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம். திரு. டபிள்யூ. தர்மசீலன் (கணிதம்) மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

திரு. எஸ் அருந்தவரத்தினம் (விஞ்ஞானம்) நெடுந்தீவு றோ. க வித்தியாலயம். திரு. ஆர். சுரேன் (விஞ்ஞானம்) நெடுந்தீவு மகாவித்தியாலயம் திரு.எஸ்.விஜயகுமார் (விஞ்ஞானம்) வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்.

திரு எஸ். முத்துச்சுவாமி (சமூகக் கல்வி) நெடுந்தீவுதெற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை.

### கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றோர்

திருமதி என். அருள்நாயகம் (சமூகக்கல்வி) மண்டைதீவு றோ.க பாடசாலை. திரு.வீ. பாலேந்திரா (சமூகக் கல்வி) தாழையடி றோ. க த. க. பாடசாலை. திருமதி. எஸ். கணேசதாஸ் (சமூகக் கல்வி) புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

திரு. கே. கதிர்காமநாதன் (சமூகக்கல்வி) நாரந்தனை ஸ்ரீகணேசவித்தியாலயம். திரு.எஸ்.கிருபாகரன் (சமூகக் கல்வி) நாகர்கோயில் மகாவித்தியாலயம். செல்வி ஈ.உலகசேகரம் (சமூகக் கல்வி) புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம். செல்வி. எஸ். பிரபாவதி (சமூகக் கல்வி) உடுத்துறை மகா வித்தியாலயம்

செல்வி கே. புஸ்பமலர் (சமூகக்கல்வி) செம்பியன் பற்று அ த.க.பாடசாலை திரு. எஸ். சண்முகலிங்கம் (சமூகக் கல்வி) எழுவை தீவு முருகவேள் வித்தியாலயம் திரு ரீ. சிவகுமாரன். (சமூகக் கல்வி) வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயம்.

திரு. வி. சிவபாலன் (சமூகக் கல்வி) தெல்லிப்பளை யூனியன் கல்லூரி திரு. என். யசோதரன் (சமூகக் கல்வி) நெடுந்தீவு மத்தி றோ. க. வித்தியாலயம் திருமதி. ரீ. சிவபாதலிங்கம். (சமூகக் கல்வி) நாகர் கோவில் மகாவித்தியாலயம்.

செல்வி. எல்.குணரத்தினம் (இந்து சமயம்) புங்குடு தீவு) மகாவித்தியா யம். திரு. பீ. ஜெகநாதன் (இந்து சமயம்) அனலை தீவு சதாசிவ மகாவித்தியாலயம் திரு. ஏ. கனகரத்தினம் (இந்து சமயம்) புங்குடுதீவு கணேச வித்தியாலயம்.

செல்வி பி. நடராசா (இந்து சமயம்) காரைநகர். ஏ. எம். த. க வித்தியாலயம்.

திரு. ஏ.நல்லசிங்கம் (இந்துசமயம்) விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயம் செல்வி எஸ். நமசிவாயம் (இந்துசமயம்) மண்டைதீவு மகா வித்தியாலயம்.

திரு. பி.பரமேஸ்வரன் (இந்துசமயம்) கப்பூது ஏகாம்பர வித்தியாலயம். திரு. வி. பத்மராஜன் (இந்துசமயம்) நெடுந்தீவு சைவப்பிரகாசவித்தியாலயம் செல்வி எஸ். புஸ்பலீலா (இந்துசமயம்) வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயம். திரு கே. இரத்தினேஸ்வரன் (இந்துசமயம்) புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாத வித்தியாலயம். திருமதி கே ஸ்கந்தகுமார் (இந்துசமயம்) எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசவித்தியாலயம். திரு. ரீ. தர்மலிங்கம் (இந்துசமயம்) அழியவளை சீ. சீ. த. க. வித்தியாலயம்.

திரு. ஏ. ஆலாலசுந்தரம் (தமிழ்மொழி) உடுத்துறை மகாவித்தியாலயம் திரு ரீ. கணேசதாஸ் (தமிழ்மொழி) புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம், திருமதி எஸ். குணசிங்க (தமிழ்மொழி) தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயம். திருமதி ரீ. கமலராசா (தமிழ்மொழி) புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

திரு. எஸ். முத்துக்குமாரசுவாமி (தமிழ் மொழி) புங்குடுதீவு இராசராசேஸ்வரி வித்தியாலயம். செல்வி எஸ். நகுலேஸ்வரி (தமிழ் மொழி) மண்டை தீவு மகாவித்தியாலயம். திருமதி கே. சந்திரசேகரம் (தமிழ்மொழி) மருதங்கேணி இந்து த. க வித்தியாலயம். திரு. கே.சண்முகநாதன் (தமிழ்மொழி) அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்.

திரு எஸ். சரவணபவானந்தன் (தமிழ் மொழி) அனலைதீவு வடலூர் த. க. வித்தியாலயம் (செல்வி ஆர். சபாலிங்கம் (தமிழ் மொழி) புங்குடுதீவு கமலாம்பிகைவித்தியாலயம்.

திருமதி என், சிவசுப்பிரமணியம் (தமிழ் மொழி) சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம். செல்வி ஏ. தனேஸ்வரி (தமிழ்மொழி) அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம். திரு ஜீ. திருக்கேதீஸ்வரன் (தமிழ் மொழி) வேலணை கிழக்கு மகாவித்தியாலயம். திருமதி. ஆர். யோகராசா (தமிழ்மொழி) செம்பியன்பற்று அ. த.க. பாடசாலை.

செல்வி சீ. யோகேஸ்வரி (தமிழ்மொழி) கப்பூது ஏகாம்பர வித்தியாலயம். திருமதி பீ. பஞ்சரத்தினம் (ஆரம்பக்கல்வி) குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை திரு. கே. இரகுபதி (ஆரம்பக்கல்வி) அனலைதீவு தெற்கு அ. த. க. பாடசாலை திருமதி எஸ். இராசரத்தினம் (ஆரம்பக்கல்வி) புங்குடுதீவு றோ.க.த.க. வித்தியாலயம்.

திரு.எஸ். தர்மகுலசிங்கம் (ஆரம்பக்கல்வி) வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயம். திருமதி ஆர். தர்மலிங்கம் (ஆரம்பக்கல்வி) கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை. திருமதி. கே. துரைசிங்கம் (ஆரம்பக்கல்வி) தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.

திருமதி இ. குணசிங்கம் (மனையியல்) கப்பூது ஏகாம்பர வித்தியாலயம். திருமதி பீ. இராஜையா (மனையியல்) அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

# பிரேத பரிசோதனையுடன் மரண விசாரணையும் தேவை

## மட்டக்களப்பு பிரஜைகள் குழு ஜனாதிபதியை கோரும்

மட்டக்களப்பு, பெப்.6

மட்டக்களப்பில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொது மக்கள் பலியானால் அது தொடர்பான பிரேத பரிசோதனையுடன் மரண விசாரணையும் நடைபெற வேண்டும்.

மேற்படி கோரிக்கையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதென மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டது.

குழு அலுவலகத்தில் தற்காலிக தலைவர் வித்துவான் சா. இ. கமலநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட்ட பின்பு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

*படையினரின் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்படுவோர் குறிப்பிட்ட நாட்களில் கையொப்பமிடும் வசதியை பொலீஸ் நிலையத்தில் செய்து தருமாறு இணைப்பு அதிகாரியை கோருதல்— அத்துடன் கால அவகாசம் முடிந்த பின்பும் ஒப்பமிட வேண்டுமென்பதை நீக்குதல், சிலர் காலவரையறையின்றி ஒப்பமிட்டு வருவதையும் இணைப்பு அதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வரல்.

* ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டால் முன்பு 24 மணித்தியாலத்துக்குள் அரசாங்க அதிபர் ஊடாக அறிவிக்கப்பட்டது. தற்போது அறிவிக்கப்படுவதில்லை. இந்நிலையில் கைது செய்யப்பட்டோர் விவரங்களை பெற்றுத் தருமாறு அரசாங்க அதிபரை வலியுறுத்தல்.

*மதில்கள் உடைப்பு நடவடிக்கையில் படையினர் அத்துமீறி நடப்பதால் இவ்விடயத்தில் பொதுமக்களே மதில்களை உடைக்க அவர்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்குமாறு இணைப்பதிகாரியை கோருதல்.

## மகாஜன கல்லூரிக்கு நிரந்தர அதிபர் தேவை

### அபிவிருத்தி சங்கம் கோரிக்கை

காங்கேசன்துறை, பெப். 6

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு நிரந்தர அதிபர் இல்லாமையால் கல்லூரி வளர்ச்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஆகவே இக் கல்லூரிக்கு நிரந்தர அதிபர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கம் மேற்கண்டவாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்லூரியில் உயர் வகுப்பில் கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றுக் குறையை நீக்க வேண்டுமெனவும் கல்லூரியின் அபிவிருத்தி முயற்சிகளுக்காக 5 லட்சம் ரூபா ஒதுக்கித் தரவேண்டுமெனவும் சங்கம் கோரியுள்ளது.

இக் கோரிக்கைகள் [illegible] மாநில கல்விப் பணிப் [illegible] அனுப்பப் பட்டுள்ளது.

### பிரஜைகள் குழுக்கூட்டம்

மட்டக்களப்பு, பெப். 6

மட்டக்களப்பு மாநகர பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும்.

கூட்டத்தில் இப் பகுதியில் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப் பட்டு வரும் நடவடிக்கை [illegible] பல்வேறு விடயங்கள் ஆராயப் படும்.

### ஐ. பி. துரைரத்தினம் மறைவுக்கு அஞ்சலி

அச்சுவேலி, பெப். 6

அண்ணல் மகாத்மா காந்திஜியை இலங்கை மண்ணுக்கு வரவழைத்து பாராட்டி கௌரவித்த திரு. ஐ. பி. துரைரத்தினத்தின் மறைவு தமிழ் மக்களுக்கும் யூனியன் கல்லூரிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு கூறினார் யாழ் அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. நடேச இராசேந்திரன்.

அண்மையில் நடைபெற்ற யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஐ. பி. துரைரத்தினத்தின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்து பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. இராசேந்திரன் உரையாற்றிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் மகளிர் கல்லூரி
(Further Education Programme)
1 NATIONAL CERTIFICATE IN ENGLISH
2. PITMAN SHORT HAND TYPING
விடுதி வசதி உண்டு
ஆரம்ப திகதி: 10—2—86
இயக்குநர்
உடுவில், சுன்னாகம். உடுவில் மகளிர் கல்லூரி.

உதயன்
06. 02. 1986

உடுவில் மகளிர் கல்லூரி
(Further Education Programme)
I.A.B. — Preliminary / Intermediate / Final
விடுதி வசதி உண்டு
ஆரம்ப திகதி: 10—2—86
இயக்குநர்
உடுவில், சுன்னாகம். உடுவில் மகளிர் கல்லூரி.

# முல்லைத்தீவு தாக்குதல் தணியவில்லை

## பீரங்கித் தாக்குதலால் மீனவர் படகுகள் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 6

முல்லைத்தீவில் கடும் சமர் தொடர்ந்து நடக்கிறது. நேற்று 10ஆவது தினமாக படைச்சிப்பாய்களுடன் போராளிகள் உக்கிரமாக மோதியதாகத் தெரியவருகிறது.

படையினர் கடலில் இருந்து தொடர்ந்துபீரங்கிகளைத் தீர்த்தவண்ணம் இருக்கின்றனர்.

பீரங்கிக் குண்டுகளினால் இரு மீன்பிடிப்படகுகள் தாக்கப்பட்டுச் சேதம்டைந்திருப்பதாகவும்—

அதில் இருந்த மீனவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் அஞ்சப்படுகிறது.

சுமார் 6 ஆயிரத்து500 தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும் பட்டினியைஇவர்கள் எதிர்நோக்கியிருப்பதாகஅங்கிருந்துகிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அகதிகளாக இருப்போர் ஒருநேரச் சாப்பாட்டிற்குக்கூட அவதிப்படுவதாகத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு முகாமைச் சுற்றிவர உள்ள பகுதிகளில் படையினர் ஹெலிக்கொப்டர், சிறுவிமானங்கள் போன்றவற்றில் இருந்து குண்டுகளை வீசினர்.

படைவிமானங்களை நோக்கி கீழிருந்து ரொக்கட் லோஞ்சர்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் உயரத்தில் பறந்தவாறு தாக்குதல்களை நடத்தின.

மோட்டார்ஷெல் குண்டு, பீரங்கிக் குண்டினால் கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் சடலங்கள் சிலவற்றை உறவினர் பலசிரமத்துக்கு மத்தியில் அவ்விடத்திலிருந்து எடுத்துச்சென்று மக்கள் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகள் முகாமிற்கு அண்மையில் வைத்து இறுதிக்கிரியைகளை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது

## 10 வயது மாணவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி ஆசிரியை திருமதி எஸ். கோபாலகிருஷ்ணன் உதயன் செய்தியாளரிடம் சம்பவம் பற்றி பின்வருமாறு கூறினார்.

நேற்று பகல் 12 மணி அளவில் பருத்தித்துறைப் பக்கமாக குண்டுகள் வெடித்தன.

எப்போதும் கேட்கும் சத்தங்கள்தானே சற்று நேரத்தில் நின்று விடும் என நினைத்தோம்.

மாணவர்கள் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தனர். அதிபர் எல்லா மாணவர்களையும் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். குண்டுகள் வெடித்துக் கொண்டே இருந்தன.

பெற்றோர்கள் சிலர் ஓடிவந்து தங்கள் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

அப்போது இந்தப் பிள்ளையும் (நிருபா) அவர்கள் பின்னால் சென்று கொண்டிருந்தது.

திடீரென எமது கல்லூரிக்கு அருகில் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. அப்போது சிலர் நிருபாவுக்கு குண்டு பட்டுவிட்டது என ஓடி வந்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் நிருபாவை கையில் சுமந்தபடி மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தனர். இளைஞர்கள் நிருபாவை மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர்.

நிருபாவை யாழ்ப்பாணம் கொண்டு போகும்படி அங்குள்ள வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடனே இளைஞர்கள் சிலர் வாகனம் ஒன்றில் ஏற்றி மின்னல் வேகத்தில் யாழ் வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

இப்படி பிரஸ்தாப ஆசிரியை கூறினார்.

## திண்ணையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது சிவன் கோயிலடிப் பக்கமாகக் குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.

நான் பயத்தினால் முருகா! முருகா என்றபடி வீட்டுத் திண்ணையில் இருந்தேன்.

தொடர்ந்தும் நகர்ப்புறப் பக்கமாக குண்டுகள் வெடிக்கும் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

எனக்கு கண் தெரியாதபடியால் வேறு இடத்துக்கு எழுந்து செல்ல முடியவில்லை.

அப்படியே கடவுளைக் கும்பிட்டபடி இருந்த போது எனது வீட்டின் ஓடுகளைத் துளைத்துக் கொண்டு வந்த ஏதோ ஒரு பொருள் வீட்டுக்கு முன்பக்கம் விழுந்து வெடித்தது.

எனது கண்ணில் காயம் ஏற்பட்டு இரத்தம் ஓடியது எனக்கு மயக்கம் ஏற்பட்டு 'பொத்' என்று விழுந்து விட்டேன்.

பின்னர் எனது உறவினர்கள் என்னை மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்ச் சேர்த்தனர். பின்பு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

இவர் பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்தவர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி: 06-02-1986

## பெண்கள் ஒப்பாரி வைக்க புங்குடுதீவில் கொடும்பாவிகள் எரிப்பு!

மண்டைதீவு, பெப் 6

புங்குடுதீவில் கடந்த செவ்வாய்க்கிழமை சுதந்திரதினப் பகிஷ்கரிப்பு ஊர்வலமும் கொடும்பாவி எரிப்பும் இடம் பெற்றன.

ஊர்வலம் சென்ற பிரதான வீதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பெண்கள் ஒப்பாரி வைக்கப் பறை மேளத்துடன் ஊர்வலம் முற்றவெளி மைதானத்தை அடைந்தது. பின்னர் பொதுக் கூட்டம் ஒன்றும் நடந்தது.

சந்திக்குச் சந்தி ஊர்வலம் நிறுத்தப்பட்டு கருத்துப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோரின் கொடும்பாவிகள் தீமூட்டி எரிக்கப்பட்டன

## காரைநகரில் நாளை பேரணி

யாழ்ப்பாணம், பெப். 6

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குக் காரைநகரில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

காரைநகர் வாரிவளவில் இருந்து பேரணி புறப்பட்டு முக்கிய வீதிகளூடாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடையும்.

உதவி அரசாங்க அதிபரிடம் கண்டன மகஜரைக் கையளித்த பின்னர் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

பொதுமக்கள், அன்னையர் முன்னணியினர், வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்கள், மாணவ, மாணவியர், இளைஞர்கள் ஆகியோரை இப் பேரணியில் கலந்து கொள்ளும்படி காரைநகர் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. செல்லையா நவரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கடையைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுப் பகல் 12 மணிஅளவில் பஸ் நிலையப் பக்கமாக சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

அதைத் தொடர்ந்து 'கிரனேட்' வெடிக்கும் சத்தங்களும் கேட்டன.

நான் பயத்தினால் கடையை இழுத்து மூடி விட்டு வெளியே வந்தேன்.

அப்போதும் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

எங்கிருந்தோ வந்த குண்டு ஒன்று எனது இடுப்பைத் தாக்கியது.

இதனால் இரத்தம் ஓட அந்த இடத்தில் அமர்ந்து விட்டேன்.

வானில் வந்த இளைஞர்கள் என்னை வானில் தூக்கிப் போட்டு மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு நான் கொண்டுவரப் பட்டேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

## பருத்தித்துறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் அதே இடத்தில் இறந்தனர்.

அதன் பின்னர் மரக்கறிச் சந்தையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இருவர் அப்பொழுது கொல்லப்பட்டனர். இச் சம்பவங்களில் காயம் அடைந்தவர்களில் இருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் இறந்தனர்.

பரவலாக நடந்த சம்பவங்களில் 15 க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

வட இந்து மகளிர் கல்லூரிப் பகுதியிலும் ஒரு ஷெல் விழுந்தது, அப்பொழுது 10 வயது மாணவி ஒருவர் காயம் அடைந்தார்.

இதன் பின்னர் இராணுவம் முகாமுக்குத் திரும்பியது.

இராணுவம் முகாமுக்குத் திரும்பிய பின்னர் முகாம்மீது போராளிகள் பரவலாகத் தாக்குதலை நடத்தினர்.

இராணுவத்தினரும் பதிலடியில் இறங்கியதால் அப்பகுதி நேற்று பெரும் போர்க்களம் போல் காட்சி அளித்தது ஹெலிக்கொப்டர் தாக்குதலும் இடம்பெற்றது.

பொது மக்கள் பாதுகாப்புத்தேடி அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர்.

முகாமுக்குச் சமீபமாக உள்ள மீன்வாடிகள் நேற்றுத் தீக்கிரையாகின. மீனவர்கள் பலர் தாக்கப்பட்டனர்.

## இ.தொ.கா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களால் தாக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வன்செயல்களை ஆட்சேபித்தும், உணவுப் பொருள்கள் கிடைக்காததைக் கண்டித்தும் சுமார் 50,000 தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர்.

இதே வேளை அரசாங்க சார்பு தொழிற்சங்கமான லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஒருவர் கித்துல்கல ... இடத்தில் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் கிடைத்தன.

## கிழக்கில் நேற்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைச் சுட்டு வீழ்த்தினர். விமானி உட்பட மூவர் மரணமானார்கள்.

மோதலின்போது மேலும் ஐந்து படையினர் மரணமானதாகவும் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் அஞ்சப்பட்டது.

ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகு நாலா திசையும் சுழற்றிச் சுழற்றிச் சுட்டது இதனால் மூதூரில் பல வீடுகள் சேதமுற்றன.

பயம் கொண்ட மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி தூர இடங்களுக்குச் சென்று புகலிடம் தேடினர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி, மாலையிலும் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனராம்.

### மட்டக்களப்பில்

நேற்றுக் காலை செங்கலடி-பதுளை வீதியில் இலுப்படிச்சேனை என்ற இடத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்தது. அப்போது அதன்மீது சுடப்பட்டது.

புதிய ஆயுதப்படை முகாமை நிறுவுவதற்காக ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டரில் தாழப்பறந்து பார்வையிட்ட சமயமே இத்தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

போராளிகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஹெலிக்கொப்டர் மீது தாக்குதல் நடத்தியது இதுவே முதல் தடவை என்றும் சொல்லப்படுகிறது

காயம் அடைந்த விமானமோட்டியின் பெயர் ஜயம்பதி, வயது 25. மடுகாயமடைந்த சிப்பாயின் பெயர் பெரேரா, வயது 21.

காயமடைந்தவர்களுடன் ஹெலிக்கொப்டர் அவசரம் அவசரமாக வந்து மட்டக்களப்பு விமானத்தளத்தில் இறங்கியது.

இரண்டு சிப்பாய்களும் முதலில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் விமான மூலம் கொழும்புக்குக் கொண்டு போகப்பட்டனர்.

இச்சம்பவத்தின் பின்னர் ஆயுதப்படையினர் அந்த இடத்நக்கு விஜயம் செய்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 2 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## இராணுவத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ரயிலை மல்லாகம் ரயில் நிலையம்வரைகொண்டு வந்தனர்.

மல்லாகம் ரயில் நிலையத்தில் வைத்து ரயிலில் இருந்து பொருள்கள் எடுக்கப்பட்டன. ரயிலில் இருந்த தேங்காய், பருப்பு போன்ற உணவுப் பொருள்களும் டயர், ரியூப் போன்றவையும் அபகரிக்கப்பட்டன.

அச்சமயம் ஹெலிக்கொப்டர் ஒன்று அந்த இடத்துக்கு வந்து குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தது.

சிறிய விமானம் ஒன்றும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் மேலே பறக்க இந்த ரயில் பின்பு ஆயுதப்படையினரின் பாதுகாப்புடன் மீண்டும் காங்கேசன் துறை ரயில் நிலையத்துக்கு நண்பகல்12-30 மணி அளவில் வந்து சேர்ந்தது.

... பொருள்கள் இறக்கும் ... ஆரம்பமாகின.

## யாழ் - கொழும்பு...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் பயணத்தைத் தொடர்ந்தேன். இடைவழியில் டிக்கெட் பரிசோதகர்கள் சோதனை நடத்தினர். டிக்கெட்டுகளைப் பார்த்தனர்.

டிக்கெட்டுகளில் 25-1-86 திகதியும் 4-2-86 திகதியும் இருப்பதாகக் கூறினர். நான் பழைய டிக்கெட்டில் பிரயாணம் செய்வதாகக்கூறி தண்டப்பணம் செலுத்தவேண்டும் என்று என்னிடம் பரிசோதகர்கள் கூறினார்கள்.

இது எனது தவறு அல்ல என்று கூறி என் நிலையை விளங்கப்படுத்தினேன். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

தண்டப்பணம் செலுத்தப்படாவிட்டால், அனுராதபுரம் பொலீஸில் ஒப்படைக்கப்படுவேன் என்று அவர்கள் எச்சரித்தனர். அதைத் தொடர்ந்து 179 ரூபாவை தண்டப்பணமாகச் செலுத்தினேன். இதேபோன்று மானிப்பாய் நண்பரும் செலுத்தினார். ஆகவே பயணிகள் டிக்கெட்டுகளை வாங்கும்போது அதில் உள்ள திகதிகளை நன்கு கவனிக்கவேண்டும்''.

இப்படி உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த அன்பர் அழாக்குறையாகக் கூறிமுடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

இறுதிச் சுற்று—

## இந்திய அணி தோல்வி!

### முதலாவது ஆட்டத்தில் ஆஸியிடம்

சிட்னி, பெப் 5

உலகக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் மும்முனை கிரிக்கெட் போட்டியில் இறுதிச்சுற்றின் முதல் ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலிய அணியிடம் நேற்று தோல்வியடைந்தது.

இறுதிச் சுற்றில் இன்னும் இரண்டு ஆட்டங்கள் எஞ்சியிருக்கின்றன. இந்த ஆட்டங்களில் ஏதேனும் ஒன்றில் இந்தியா தோல்வியடைந்தால் அது வெற்றிக் கிண்ணத்தை ஆஸியிடம் கோட்டை விட்டுவிடும்.

இறுதிச் சுற்றின் முதல் ஆட்டம் நேற்று சிட்னியில் நடந்தது.

இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மெல்போர்னிலும் மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி சிட்னியிலும் நடைபெறும்.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 44 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து இறுதி நேரம் வரை துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 160 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் ஆட்டத்தில் 11 ஓட்டங்களினால் இந்திய அணி தோல்வியடைந்தது.

## தெல்லிப்பழை வைத்தியசாலை அணி வெற்றியீட்டியது

காங்கேசன்துறை, பெப், 6

காங்கேசன்துறை உப அலுவலக உதைபந்தாட்ட அணியும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை உதைபந்தாட்ட அணியும் மோதிய சிநேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அணி 1-0 கோலால் வெற்றியீட்டியது.

காங்கேசன்துறை உப அலுவலக விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடந்தது.

ஆரம்பம் முதல் இறுதி வரை போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது.

இரு பகுதியினரும் விட்டுக் கொடுக்காமல் ஆடிய போதும் வைத்தியசாலை அணி சாதுரியமாக ஒரு கோலைப் போட்டது

இறுதியில் 1-0 கோலால் வைத்தியசாலை அணி வெற்றி பெற்றது

## பண்டாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியின் இலங்கைவிஜயம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது பற்றி அமைச்சரவைநேற்று ஆராய்ந்தது.

அப்பொழுதே மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டது.

பிரதமர் ராஜீவ் காந்தியின் அலுவல்கள் நிறைய இருப்பதால் தான் திரு. பண்டாரியின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டது என்று அமைச்சரவை கருதியது என்றும் அமைச்சர் அல்விஸ் சொன்னார்.

இதே வேளை மலையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இளைஞர் கைது

கொழும்பு, பெப். 6

சுதந்திரதினம் அன்று கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து கைக்குண்டுடன் ஒருநபர் கைதுசெய்யப்பட்டார்.

அதேசமயம் ஜம்பட்டா பொலீஸ் பகுதியில் ஒரு தமிழ் இளைஞரைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

## ஏறுவூர் சம்பவத்தில் மூன்று தமிழர் பலி

மட்டக்களப்பு, பெப். 6

ஏறுவூரில் செவ்வாய்க்கிழமை (4-2-86) காலை அதிரடிப் பொலீஸார் சுட்டதில் 3 தமிழர்கள் மரணமானார்கள்.

மரணமானவர்களின் சடலங்கள் அடையாளங் காணப்படுவதற்காக ஏறுவூர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

ஏறுவூர் சந்தைப் பகுதியில் வைத்துத்தான் அதிரடிப் பொலீஸ் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

காலை 11 மணியளவில் ஏறுவூர் பொலீஸ் நிலையத்தில் இருந்து அதிரடிப் படையினர் செங்கலடி நோக்கி ரோந்து போய்க்கொண்டிருந்தனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து 200 யார் தூரத்தில் வைத்து அதிரடிப் படையினர் மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

அதன் பின்னர் அதிரடிப் படையினர் சந்தைப் பக்கமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

## யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்ட பதினொரு பேர் விவரம்

நல்லூர், பெப். 6

பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களினால் காயமடைந்த பதினொருபேர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

1. கிருஷ்ணபிள்ளை ராஜேந்திரம் 28 வயது பருத்தித்துறை நகரசபையில் மின்சாரவேலை செய்யும் ஊழியர், பருத்தித்துறை சந்தையில் மீன் வாங்கச் சென்றபோது இவருக்குத் தொடையில் காயம் ஏற்பட்டதாம்.
2. சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் 47 வயது. நாரந்தனைவாசி பருத்தித்துறை "சிங்கர்" தையல் மெஷின் கம்பெனியில் வேலை செய்பவர். இடுப்பில் காயம்.
3. சோலையன் கண்ணகை 45 வயது. வரணிவாசி. சந்தையில் தேங்காய் விற்கும்போது இவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது.
4. எஸ். சஞ்சீவன் 22 வயது தலையில் காயம்
5. செல்வானந்தராசா நிருபா 10 வயது வட இந்து மகளிர் கல்லூரி மாணவி, இவருக்கு கழுத்தில் காயம்.
6. ஆ. அன்ரன், 22 வயது.
7 இராமலிங்கம் சரவணமுத்து, 77 வயது. கண்ணின் மேல் காயம். பருத்தித்துறை செட்டித்தெருவைச் சேர்ந்தவர்.
8. எஸ். துரைராசா, 43 வயது சுழிபுரம் வாசி
9 செல்வி ஜெயந்தி 12 வயது பாடசாலை மாணவி வாயில் காயம்.
10. திருமதி. ஞானப்பு 47 வயது. கழுத்தில் காயம்.
11. திருமதி. சிவகாமசுந்தரி 50 வயது. கை முறிந்தது.

கடைசி மூவரும் தும்பளையைச் சேர்ந்தவர்கள்.

## தாக்குதலில் காயம்

சுன்னாகம், பெப். 6

ரயில் கடத்தலை அடுத்து சுன்னாகம், சூராவத்தைப் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் சிலர் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகினர்.

ஷெல் குண்டு ஒன்று மரத்தில் பட்டு தெறித்ததால் முன்னாள் ஆசிரியர் ஒருவரின் வீடு சேதம் அடைந்தது.

ஹெலிக்கொப்டரை நோக்கி நிலத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதனை அடுத்து ஹெலிக்கொப்டர் உயரப் பறந்து மறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவங்களை அடுத்து நேற்று சுன்னாகத்தில் கடைகள் மூடப்பட்டிருந்தன. சன நடமாட்டம் இன்றி சந்தையும் பஸ் நிலையமும் வெறிச்சோடிக் கிடந்தன.